RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s739

OPEN ACCESS

# பிசிராந்தையார் நாடகத்தில் பாரதிதாசன் காட்டும் வாழ்வியல் நெறிகள்

ஆ. ராஜேஸ்வரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா.

# The Morals of Life Shown by Bharathidasan in Pisiranthaiyar's Play

**A. Rajeshwaran [a, *]**

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author: pavithraa0501@gmail.com

Received: 30-12-2021
Revised: 20-04-2022
Accepted: 28-05-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Pisiranthaiyar was a poet of Sangam period. He was very friendly with King Kopperuncholan. He was a devotee of Pandyan Idudai Nambi. He gave advice and political virtue to the king and earned the respect of Pandyan. Pisiranthaiyar lived in a town called 'Pisir' in Pandya country. Bharathidasan has created this drama in the twentieth century with his imaginative poetry, centering on the friendship of the devotees. During the Sangam period, the doctrine of virtue had a great influence on the society. Social life is structured through this religion. Ancient Tamil society was enriched by urban civilization. Tamil civilization was one of the pioneer civilizations of the world before this civilized way of life was built. The education seen in the people and the poets during the Sangam period makes clear the knowledge of the Tamil people. Sangam period is built on individual morality, political virtue, chivalry, arts etc. The types of food that prevailed during the Sangam period, the philosophy of nature, astronomy, mentalism, solvency, commerce, water management, life rituals etc. are the aspects of life. In Pisiranthaiyar's play, Bharathidasan takes the life of that time in the context of the 20th century for the social development of Tamil people and building the values of life for the upliftment of the Tamil society. In the life of a Tamilian, culture, art, education, and valor are combined, hospitality, kindness, chastity, justice, friendship etc. are mixed in the life of the ancient Tamilians, and Bharathidasan has designed his concept that these values of life should be incorporated in the contemporary environment as well. This review is structured on a qualitative approach. This article examines the living norms of the Tamil people in the context of Pisiranthaiyar's era and the living norms mentioned by Bharathidasan.

**Keywords:** Bharathidasan, Pisiranthaiyar, Moral, Civilizations, Political Virtue

## முன்னுரை

பிசிராந்தையார் நாடகம் 34 காட்சிகளின் வழி கட்டமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிகளில் பாரதிதாசன் தமிழர்தம் வாழ்வியல் மேம்பாட்டிற்குத் தன் சிந்தனை வளத்தால் சில கருத்துக்களை எடுத்துரைக்கிறார். அவற்றை தமிழனுக்குரிய பண்புகளாக வடிவமைக்கிறார். சங்க காலப் புலவர் பிசிராந்தையார், அரசன் பாண்டியன் அறிவுடை நம்பி, கோப்பெருஞ்சோழன், அமைச்சன், படைத்தலைவன், கோப்பெருஞ்சோழனின் மகன்கள், அறிவுடை நம்பியின் மனைவி, கோப்பெருஞ்சோழனின் மனைவி சோழ மன்னி, புலவர் பொத்தியார் போன்றோர், கதை மாந்தர்களாக இந்நாடகத்தில் படைக்கப்பட்டுள்ளனர். தமிழருக்கான வாழ்வியல் கருத்துக்களை உருவாக்கும் சூழலிடத்து சில கற்பனைக் கதைமாந்தர்களையும் இந்நாடகத்தில் படைத்திருக்கிறார். பிசிராந்தையார் நாடகம் தமிழர் வாழ்வியலில் அறம் நிலைபெற்றிருத்தலுக்கான மேன்மையான கருத்தாக்கங்களைக்

கூறுகின்றது. பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டு காலச்சூழலில் தமிழர் வாழ்வில் எல்லா நலமும் வளமும் பெற்றுத் திகழ வேண்டும் என்றும், அவர்களின் வாழ்வில் அறநெறிகள் எந்நாளும் இணைந்திருப்பதால் பயன்கள் ஏற்படும் எனக் கூறுகின்றார். மக்கள் உள்ளத்தாலும், சிந்தனையாலும் வாழ்வியலில் மேம்படுவதற்கான நெறிமுறைகளை சங்ககாலச் சூழலியலோடு இணைத்து, தன் கருத்துக்களை எடுத்தாளுகின்றார். பாரதிதாசன் இந்நாடகத்தில் தன் கற்பனை வளத்தில் வாழ்வியல் அறநெறிக்கருத்துக்களை கூறுகின்றார். மேலும், அக்கருத்திற்கு உயிரோட்டமாக கற்பனை கதைமாந்தர்களையும் வடிவமத்திருக்கிறார். பாரதிதாசன் `நாடகத்துள் நாடகம்' என காட்சிகளை புகுத்தியமை சிறப்பிற்குரியதாகும். அரசனின் கடமை, அமைச்சனின் மாண்பு, பாண்டியன் அறிவுடை நம்பியின் நீதியின் மாண்பு, பிசிராந்தையாரின் நட்பு போன்றவற்றால் இக்கட்டுரையானது கட்டமைக்கப்பட்டுள்ளது.

## அரசனின் கடமை நெறி

பாண்டியன் அறிவுடை நம்பியின் அரண்மனை வாயிலில்ஆராய்ச்சி மணி அடிக்கிறது. புறவெளியில் காற்றும், மழையும் சூறாவளியாக வெளிப்படுகின்றன. சூறாவளியுடன் பெருமழையினைக் கண்ட அரசன் மக்கள் நிலை காண வெளியேற முற்படுகின்றான். அச்சூழலில் அரசி தடுக்கிறள். அதற்கு மறுமொழியாக அறிவுடை நம்பி, ``மக்கட்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டும். எனக்கு மட்டும் ஒன்றும் நேர்ந்துவிடக்கூடாது. அதுதானே உன் குறுகிய நோக்கம். தீமை வந்தபோது காட்டிக் கொடுக்கும் தீயவனா நான்? காற்றென்றும் மழை என்றும் வந்த கடுங்கூற்றின் உடலை என் வாள் இரு கூறாக்க வேண்டும், அல்லது அக்கூற்று என் தலையைச் சுக்கல் நூறாக்க வேண்டும்." என்கிறான். மக்களைக் காக்கும் கடமை நெறியே பெரிது எனக் கருதிய அவன் உரை, அரசனுக்குரிய குடிகளைக்காக்கும் கடமையாகப் பார்க்கப்படுகிறது (Bharathidasan, 2009). இக்கடமையில் தவறாததால் அவன் ஆட்சி புகழ்பெற்று விளங்குகிறது.

## இல்லற நெறி

ஒரு குட்டையில் உடையப்பன் என்பவன் மீன் பிடிக்க வலை வீசுகிறான். ஆனால் மீன் அகப்படவில்லை. அப்போது அவன் மனைவி ஓடைப்பூ வருகிறாள். வீட்டிற்குச் சாப்பிட வர அழைக்கிறாள். ஆனால், அவனோ, நினைத்ததை முடிக்கும் துணிவு வேண்டும் எனக் கூறி, ஒரு மீனாவது பிடித்தால்தான் வருவேன், இல்லையேல் உயிரை மாய்த்துக்கொள்வேன் என்கிறான். இதனைக் கேட்ட ஓடைப்பூ அதிர்ச்சியடைகிறாள். இந்நிலையில் அவள், மீன்களிடம் தனக்கு வாழ்வு தர வேண்டும் என்ற கருத்தில்,

``வலையில் வந்து சேரவேண்டும்,
வாழும்படி செய்ய வேண்டும், மீன்களே! -என்னை
வாழும்படி செய்ய வேண்டும், மீன்களே!" (Bharathidasan, 2009)

எனவும்,

``துன்ப வாழ்வே நீ போ, போ, போ!
இன்ப வாழ்வே நீ வா, வா, வா!
அன்பன் வாழ்ந்தால் நான் வாழ் வே னே!
அன்பன் செத்தால் நான் சா வே னே!
துன்ப வாழ்வே நீ போ, போ, போ!
இன்ப வாழ்வே நீ வா, வா, வா!" (Bharathidasan, 2009)

எனவும் பாடுகிறாள். கணவன் வாழ்ந்தால் வாழ்வேன் என்றும், இல்லையேல் அவனோடு தன் உயிரையும் மாய்த்து கொள்வேன் என்னும் ஓடைப்பூவின் உளநிலை அவள் கணவனிடத்துக் கொண்ட அன்பையும், கற்பின் வலிமையையும் காட்டுகிறது. இதனையே, கணவன் மனைவியின் இல்வாழ்க்கையின் மாண்பாக,

``அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது"

என்று வள்ளுவர் கூறுகிறார் (Devaneya Pavanar, 2012).

## அமைச்சனின் மாண்பு

பாண்டிய நாட்டில் பச்சைக்கிளி என்பவள் கொலை செய்யப்பட்டு இறந்தாள். அவளின் கொலைக்கான காரணம் அறியாமல் மன்னன் துடிக்கிறான். இல்லையேல் தான் உயிரை மாய்த்துக்கொள்வதாகத் தெரிவிக்கிறான். இந்நிலையில் அமைச்சர், ``அரசர் அறிய வேண்டும் என் சூளுரை: மூன்று நாட்களில் கொலையைப் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து கூறுவேன். முடியாவிட்டால் செத்து மடிவேன்." என்கிறார் (Bharathidasan, 2009). இச்சூளுரை அமைச்சனின் அற மாண்பாகத் திகழ்கிறது. இதனையே வள்ளுவர்,

``சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை

வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

எனச் சொல் வன்மையாக கூறுகிறார் (Devaneya Pavanar, 2012). தான் சொல்லும் சொல்லின் செயலை முடிக்கும் திறம் அறிந்து, அச்சொல்லினை சொல்லல் என்பது அவ்வமைச்சனின் மதிநுட்பமும் அற மாண்பும் ஆகும்.

## பிசிராந்தையாரின் மதிநுட்பம்

பாண்டிய நாட்டில் நடந்த பச்சைக்கிளியின் கொலையை மையமாக வைத்து, பாரதிதாசன் தன் கருத்தாக, ஓர் நாட்டில் எல்லாரும் நல்லவராகவும், செல்வராகவும் இருந்தால் மட்டும் போதாது, அவர்கள் வல்லவராயும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் தமக்கு நேரவிருக்கும் தீங்கினை எதிர்கொள்ள முடியும், என்கிறார். இதனைச் சங்க காலச் சூழலில் பிசிராந்தையார் கூற்றாக, ``எல்லாரும் நல்லவராகி விட்டார்கள். எல்லாரும் செல்வராகி விட்டார்கள். இதனால் மக்கள் உள்ளம் மென்மை அடைந்துவிட்டது. பகைவராலோ, இயற்கையாலோ ஏற்படும் துன்பத்தை ஒரு சிறிதும் தாங்க மாட்டாதவராகிவிட்டார்கள். இது மட்டுமன்று முக்குணங்களின் மாறுபாட்டால் மக்கள் உள்ளத்தில் திடீரென நன்மை செய்வதும், தீமை செய்வதும் ஆகிய கோளாறுகள் ஏற்படும். தீமை படையெடுக்கும்போது அதைத் தடுத்து தன்னை காத்துக்கொள்ளும் வன்மையும் இல்லாதொழிந்தது." என்று கூறுகிறார் (Bharathidasan, 2009).

## பாண்டியன் அறிவுடை நம்பியின் நீதிநெறி

பாண்டிய நாடு பச்சைக்கிளியை இழந்து, மக்களின் கண்ணீரால் வழிந்தது. இப்பெருங்குற்றம் புரிந்தவர்கள் மான்வளவனும், தூயனும் ஆவர். பாண்டியன் அறிவுடை நம்பி, பிசிராந்தையார் வீற்றிருக்க, மக்கள் கூடிய அவையில் தூயனும், மான்வளவனும் தங்கள் குற்றத்தை உணர்ந்து, தங்களுக்கு மரணத்தைத் தண்டனையாகத் தர வேண்டும் என உள்ளத்தால் உருகுகின்றனர். இச்சூழலில் பாண்டிய மன்னன், ``குற்றத்தை உணர்ந்தீர்கள்; அதற்காக வருந்துகின்றீர்கள். அதனால் திருந்திவிட்டீர்கள். உங்களை விடுதலை செய்கிறேன். உயிர்விட எண்ணுகிறீர்கள். வேண்டாம்! பச்சைக்கிளியை இழந்து வருந்தும் பாண்டிய நாடு நல்ல உள்ளம் படைத்த உங்களையுமா இழக்க வேண்டும்?" என்கிறான் (Bharathidasan, 2009). இதனை வள்ளுவர்,

``முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்"

என்று மன்னனின் அற மாண்பாகக் கூறுகின்றார் (Devaneya Pavanar, 2012). நடுநிலை தவறாது தீர்ப்புச்செய்து எவ்வகையிலும், துன்பம் நேராது குடிகளைக் காக்கும் அரசனின் தீர்ப்பின் வழி வாழ்வியல் அற நெறியை அறிய முடிகின்றது.

## பிசிராந்தையார் நட்பு

"நட்பு என்னும் சொல்லுக்கு உறவு, சிநேகம், சுற்றம், நேசம் என்னும் பொருளை மதுரை தமிழ்ப் பேரகராதி" தருகிறது. "நட்பு என்னும் சொல்லுக்கு நண்பு, சுற்றம், கேள், தொடர்பு, நண்பன், யாழின் நான்காம் நரம்பு, கேண்மை என்னும் பொருள்களைக் கழகத் தமிழ் அகராதி" தருகிறது.

கோப்பெருஞ்சோழனிடத்துக் கொண்டிருந்த நட்பினைப் பிசிராந்தையார் இயற்றிய அன்னச் சேவல்! என்னும் செய்யுள் புறநானூற்றின் 67ம் செய்யுளாக இடம்பெற்றுள்ளது. இப்பாடலையே பாரதிதாசன் இந்நாடகத்தில் மேற்கோள்காட்டி நட்பின் இலக்கணத்தைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறார் (Bharathidasan, 2018a).

"அன்னச் சேவலே! நீ குமரிப் பெருந்துறையிலுள்ள அயிரை மீன்களை நிறைய உண்டு வட திசைக்கண் இமய மலைக்குப் போகின்றாய் என்றால் இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாகிய நல்ல சோழநாட்டின் உட்சென்று பொருந்தினால், உறையூரின் கண் உயர்நிலை மாடத்திலேயே உன் பெட்டையோடு தங்கி, வாயில் காவலர்க்குச் சொல்ல வேண்டுமே என்றுகூட எண்ணாமல் தடையில்லாமல் கோயிலினுட் புகுந்து, பெருங்கோவாகிய கிள்ளி கேட்டால் நான் பெரிய பிசிர் என்னும் ஊரின்கண் உள்ள ஆந்தையுடைய அடியேன் என்று சொல்லிவிட்டால், மாட்சிமையுடைய நின் பேடை பூணத் தனது நல்ல அணிகலத்தை அளிப்பான்" இக்கூற்றின் வழி, பிசிராந்தையாரின் நட்பு மேலாண்மை அறியப்படுகின்றது (Bharathidasan, 2018b).

இந்நட்பின் மாட்சியை வள்ளுவர்,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு"

என்கிறார். ஒருவரைக் கண்டவிடத்து முகம் மட்டும் மலர நட்பது நட்பாகாது, அன்பால் உள்ளமும் மலருமாறு நடப்பதே உண்மையான நட்பு என வள்ளுவர் கூறுவது இவ்விடத்துப் பொருந்தும். பிசிராந்தையாருக்கும், கோப்பெருஞ்சோழனிற்குமான உள்ளத்து நட்பு என்பது இன்றும் அனைவராலும் போற்றுதற்குரியதாகும் (Devaneya Pavanar, 2012).

கோப்பெருஞ்சோழன் தன் மகன்கள் தன் முடி பறிக்க எண்ணுவதை அறிந்து, அவர்களின் இழிச் செயலால், சோழநாட்டின் புகழ் நிலைகுலைந்தது என்றெண்ணி, வடக்கிருக்க ஒரு மனதாக முடிவு செய்கிறார். வடக்கிருத்தல் என்பது வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணாமல் உடல் வருத்தி உயிர் விடுதல் ஆகும். இச்சூழலில் இந்நிலையை மாற்ற அரசி மன்னி அரசனிடம் மன்றாடுகிறாள். தன் நிலையில் கோப்பெருஞ்சோழன் உறுதியாக இருக்கின்றார்.

தான் வடக்கிருக்கும் இடத்திற்கு அருகே மற்றொரு குழி தன் நண்பர் பிசிராந்தையாருக்குத் தோண்டச் சொல்கிறார். அப்போது, அங்கு நின்ற சான்றோர், கெட்டபோது நட்டாரும் கைவிடும் சூழலில், பிசிராந்தையார் எவ்வாறு வருவார் எனக் கூறுகின்றனர். இதற்குக் கோப்பெருஞ்சோழன், ``அவர் எனக்குச் செல்வங் கொழிக்கும் நாளில் வாராது நிற்பினும், நான் அல்லல் அடையும் இக்காலத்து வாராதிரார்" என உறுதிமொழிகின்றார் (Bharathidasan, 2009).

தன் நண்பர் வடக்கிருக்கும் செய்தி அறிந்த பிசிராந்தையார், சோழனைத் தேடி வந்தடைந்தார். அங்கு நின்ற சான்றோர்கள் வியப்படைகின்றனர். பிசிராந்தையாரும் நண்பரோடு வடக்கிருக்க முடிவு

செய்கின்றார் (Bharathidasan, 2018a). அச்சூழலில் அமைச்சர் வடக்கிருத்தலைத் தவிர்க்க வேண்டுகிறார். அதற்குக் கோப்பெருஞ்சோழன்,

``உண்ணோம் உணவு பருகோம் ஒருதுளிநீர்

எண்ணோம் உலகை இனி." (Bharathidasan, 2009)

பிசிராந்தையார்,

``இனித்திருக்கும் எங்கள் சாவும்! எமக்குத்

தனித்திருக்கும் வாய்ப்பளிப்பீர் சற்று."

என்றும் உரைக்கின்றனர் (Bharathidasan, 2009). மறுமொழி கூறிய, சிறிது நேரத்தில் இரு உடல்களும் உயிர் அற்றுச் சாய்கின்றன. இச்சூழலில் உலகம் அவர்களிடத்து வணங்கி நிற்கின்றது.

இந்நட்பின் சிறப்பை பாரதிதாசன் இந்நாடகத்தில் இறுதியாக,

``நண்புக் குயிர்தந்தான் நண்பு பெரிதென்றான்

உண்மை உடையான் பிசிராந்தை நற்பெயர்

தெண்ணிலவும் செங்கதிரும் உள்ளநாள் வாழியவே,

எண்ணுலவி நல்லறம் என்றென்றும் வாழியவே!" என்று வாழ்த்துகின்றார் (Bharathidasan, 2009). நட்பின் இலக்கணம் கூற வந்த வள்ளுவர்,

``புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்

நட்பாம் கிழமை தரும்."

என்கிறார் (Devaneya Pavanar, 2012). ஒருவருக்கொருவர் நட்புச்செய்வதற்குப் பலகாலம் பேசுவதும், உறவாடுவதும் வேண்டியதில்லை. இருவருக்குமிடையே உள்ள ஒத்த உணர்வே, நண்பர்க்குரிய நட்பின் மாண்பாகும் எனக் கூறுகின்றார். இக்கருத்தொற்றுமை பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன் நட்பில் உள்ளம் நிலைபெற்றுத்திகழ்ந்ததைப் பாரதிதாசன் தன் கற்பனைக் கலையோடு இந்நாடகத்தில் படைத்துள்ளார்.

## முடிவுரை

பிசிராந்தையார் நாடகம் சங்ககாலச் சூழலில் தமிழரின் பண்பாடுகளையும், அவர்தம் கல்விப்புலமை, வாழ்வியல் அறநெறிகள் முதலானவற்றைக் கொண்டு திகழ்கிறது. பிசிராந்தையார் மதிநுட்பமானது பண்டைய தமிழனின் அறிவாற்றலை உணர்த்துகிறது. கோப்பெருஞ்சோழனின் அரசாட்சியின் புகழும், அவன் வறியவரின் வள்ளலாகத் திகழ்ந்தமையும், அவனது தமிழ்ப்புலமையையும், நட்பின் மாண்பும் பாரதிதாசனின் மொழிநடையில் தனித்துவம் பெறுகின்றன. பாரதிதாசன் பச்சைக்கிளி என்னும் கதை மாந்தர் வழி பாண்டியன் அறிவுடை நம்பியின் அரச நீதியின் மாண்பினை எடுத்தாளுவதும் அவருக்கே உரிய சிறப்பினை உடையதாகும். பாரதிதாசன் இந்நாடகத்தில் தமிழனுக்குரிய மாண்புகளாக வாழ்வில் உறுதிவேண்டும், பிறரிடத்து அன்பு காட்டவேண்டும் போன்ற வாழ்வியல் நெறிகளை எடுத்தாளுகின்றார். பாரதிதாசன் கூறும் வாழ்வியல் நெறிகள் என்பது மனித வாழ்க்கைக்கான அறமாக கருதப்படுகின்றது.

## References

Bharathidasan, (2009) Paavendham Thoguthi 10, Ilangai Pathippagam, Chennai, India.

Bharathidasan, (2018a) Paavendharin Pisiranthaiyar (Saakitthya Acadhami Viruthu Petra Nool), Naam Tamilar Pathippagam, Chennai, India.

Bharathidasan, (2018b) Pisiranthaiyar Nadagam, Gowra Pathippagam, Chenani, India

Devaneya Pavanar, G., (2012) Thirukkural Marupurai, Gowra Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License